## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No -83/2023

Date: 31.10.2025 DW. 1 (ஆரோக்கியசாமி)

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

எனது சொந்த ஊர் காளையார்கோவில் தாலுகா, புலியடிதம்மம் கிராமம் என்றால் சரிதான். வாதி பவளக்கொடி தேவகோட்டை ராம்நகரை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதியின் கணவர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.காம் முடித்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள பிராதிற்கு பதிலுரைக்கான விபரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் வழக்குரை பாரா 4 ஒப்புக்கொள்ளப்படுகிறது என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், வாதியும் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தை படித்து ஒப்புக்கொண்டுதான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கான கிரைய ஒப்பந்தத்திற்கான அட்வான்ஸ் தொகை ரூ.40,00,000/- பெற்றுக்கொண்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியிலேயே நான் எந்த தொகையும் பெறவில்லை. ஆனால் பல தவணைகளில் என் அப்பா உடல்நிலை சரியில்லாததால் 5 லட்சம், 2 லட்சம் என ரூ.40,00,000/- பெற்றுள்ளேன். வாசா.ஆ.1 ஆவணத்தில் பல தவணைகளில் பணம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.1, வா.சா.2, மற்றும் என்னுடைய ஓட்டனரும் கையெழுத்து போட்டுள்ளனர் என்றால் சரிதான். வாசா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் 6 மாதங்களுக்குள் கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அதை எழுதிக்கொடுக்கமாட்டேன் என்று சொன்னேன். வாதியின் கணவர் ஒரு பாதுகாப்பிற்காக எழுதிக்கொடுக்க சொன்னதால் வாசா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளேன். அத்துடன் சேர்ந்து காசோலை மற்றும் புரோநோட்டுகளும் எழுதிக்கொடுத்துள்ளேன். மேற்படி விபரங்களை என் எதிர்வழக்குரையிலோ அல்லது நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வாசா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 6 மாத

காலஅவகாசம் முடிந்துள்ள வாதியால் அனுப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அதற்கு பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் பதில் அனுப்பவில்லை. அந்த சமயத்தில் நான் மஞ்சள்காமாலை நோயால் அவதிப்பட்டு திருச்சியில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணன் மருத்துவமனையில் ஒருவருடம் சிகிச்சை எடுத்தேன். அதன்காரணமாக வீட்டில் இருந்தும் ஓய்வுபெற்றேன். ஆனால் வாதியின் கணவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் ஒப்பந்தத்தில் கண்ட தொகையை திருப்பிக்கொடுத்துவிடுவேன் என்றும் அதற்குள் ஏன் அறிவிப்பு அனுப்புகிறீர்கள் என்றும் கேட்டேன். மேற்படி காலகட்டத்தில் ஸ்ரீராமகிருஷ்ணன் மருத்துவமனையில் ஒருவருடம் சிகிச்சை எடுத்தேன் என்பதை காட்டேன் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் என்னிடம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். பதிலறிவிப்பு அனுப்பாததற்கு தற்போது சொல்லியுள்ள காரணத்தை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வா.சா.ஆ.1 ஆவணம் கடன் வாங்கியதற்காக எழுதிக்கொடுத்தேன் என்று சொல்லியுள்ளதால் அதில் கண்டுள்ள ரூ.40,00,000/- தொகையை திருப்பிக்கொடுக்க எதாவது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அதில் 20லட்சம் ஒருமுறையும், 10லட்சம் ஒருமுறையும், 5 லட்சம் ஒருமுறையும் கொடுத்தேன். மேற்படி தொகை கொடுத்ததற்காக வாதியிடம் நான் எதாவது ரசீது வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. நான் வருமானவரி கட்டிவருகிறேன் என்றால் சரிதான். நான் வங்கி கணக்கிலிருந்து காசோலை மூலமோ வேறு வழியிலோ வாதிக்கு பரிவர்த்தனை செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு நான் பணம் திருப்பிக்கொடுத்தேன் என்ற விவரத்தை என்னுடைய எதிர்உரையிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் நான் பணத்தை திருப்பிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யும்போது தனியாக கடனுக்கு ஆதரவாகத்தான் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்று எதாவது எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வாதியின் கணவர் நெருங்கிய நண்பர் என்பதால் அவ்வாறு எழுதி வாங்கவில்லை. வாதி வாசா.ஆ.1 ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக அட்வான்ஸ் தொகை போக அவர் கொடுக்கவேண்டிய மீதி தொகை ரூ.4,00,000/-

இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய எதிர்வழக்குரை பாரா 11ல் வாதியிடம் பெற்ற முன்பணத்தை சமூகம் நீதிமன்றம் உத்தரவிலும் வட்டியோடு செலுத்த இந்த பிரதிவாதி தயாராக உள்ளார் என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசா.ஆ.1 உடன்படிக்கையில் 6 மாதம் முடிந்தவுடன் உடன்படிக்கை ரத்தாகிவிடும் என்று வாசகங்கள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். காலவரைமுறைச்சட்டத்தின் படி கிரைய உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல என்றும் அது காலாவதியாகிவிடும் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரை பாரா 5-ல் ஒப்பந்தகாலமான 6 மாதங்களுக்குள் வாதியை இந்த பிரதிவாதி பலமுறை நேரில் தொடர்புகொண்டு கேட்டபோது பணம் இல்லை என்று மறுத்துவிட்டார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் நான் தான் பணத்தை வைத்துக்கொண்டு அவரிடம் கேட்டேன். தாவா சொத்தை கிரையம் செய்வதற்காகத்தான் கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது என்றும் ஆனால் கடனுக்காக எழுதப்பட்டது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து மதிப்பு 15 கோடி இருப்பதால் அதை ரூ.40,00,000/-ற்கு ஒப்பந்தம் போட எனக்கு அவசியமில்லை. மேற்படி விபரத்தை என் எதிர்வழக்குரையிலோ அல்லது நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் தாவா சொத்து 15கோடி மதிப்பு பெறாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கான மதிப்பை வைத்துதான் வாதி வாசா.ஆ.1 கிரய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றும் வாதி எப்போதும் தாவா சொத்தை கிரயம் பெற தயாராகத்தான் இருந்தார் என்றும் நான் கிரயம் கொடுக்க மறுத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி வாதி தாவா சொத்தை கிரையம் பெற வாதி அருகதையுடையவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.10.30 13:17:01 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை**